# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 27.09.2019**

விசாரணை நடைபெற்ற இடம் : மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
விருதுநகர் மாவட்டம். விருதுநகர்

முன்னிலை

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 401/SCIC/2019**

| | | |
|---|---|---|
| திரு. R. ராஜ்குமார்.<br>345, நடுத்தெரு, இராமசாமியாபுரம்,<br>கூமாபட்டி 626 133 வத்திராயிருப்பு<br>விருதுநகர் மாவட்டம். | -- | மேல்முறையீட்டாளர் |

/எதிர்

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர்/<br>வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,<br>சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம்,<br>திருவில்லிபுத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம் | -- | பொது அதிகார அமைப்பு |

## ஆணை

இவ்வழக்கில் இவ்வாணையத்தால் இன்று (27.09.2019) விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட முகாம் விசாரணைக்கு மனுதாரர் திரு. R. ராஜ்குமார் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு வே. அல்லிராஜ், உதவி வனப் பாதுகாவலர் மற்றும் வன விரிவாக்க அலுவலர், வன உயிரினக்காப்பாளர் அலுவலகம், சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம், திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் 03.10.2018 தேதியிட்டு அனுப்பிய மனுவில் தாணிப்பாறையில் வனத்துறை நுழைவு வாயில் முதல் சதரகிரி சுந்தரமகாலிங்கம் கோவில் வரை வனத்துறை சம்பந்தமாகவும், சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோவில் செல்லும் பக்தர்களிடம் தாணிப்பாறையில் நுழைவுக்கட்டணம் பெறுவது சம்பந்தமாகவும் 31 இனங்களில் தகவல்கள் கோரி பொதுத் தகவல் அலுவலர், வனப்பாதுகாவலர் அலுவலகம், விருதுநகர் மண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், விருதுநகர் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர், வனப்பாதுகாவலர்

அலுவலகம், விருதுநகர் மண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், விருதுநகர் 10.10.2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரர் கோரிய தகவல்கள் வன உயிரினக் காப்பாளர், ஸ்ரீவில்லிப்புத்தூர் தொடர்புடையதால் அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் இனி வரும் காலங்களில் அவர்களை தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு 08.11.2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், வன உயிரினக்காப்பாளர் அலுவலகம், சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம், திருவில்லிப்புத்தூர் அவர்கள் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியுள்ளார். பின்னர் மனுதாரர் தான் 31 இனங்களில் தகவல்கள் கோரியதாகவும் ஆனால் 5,10,11,12,13,14,20,21 ஆகிய இனங்களுக்கு மட்டுமே பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான பதில் வழங்கப்பட்டுள்ளது என்றும் மற்ற இனங்களுக்கு சரியான பதிலை தராமல் பொய்யாக வேண்டுமென்றே தகவலை மறுத்துள்ளார் என்று தெரிவித்து பிரிவு 19(1)ன் கீழ் தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். இதற்கு மேல்முறையீட்டு அலுவலர் /வன உயிரனக்காப்பாளர் அவர்கள் 30.11.2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஒரு பதில் அனுப்பியுள்ளார். அதில் மனுதாரரால் அனுப்பப்பட்ட மேல்முறையீட்டு மனுவிற்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்படவில்லையென்றும் உரிய முறையில் விண்ணப்பக் கட்டணத் தொகையுடன் மனுவினை அனுப்புமாறு தெரிவித்து மனுதாரருக்கு மேல்முறையீட்டு மனு திருப்பப்பட்டுள்ளது. இதன் பிறகு மனுதாரர் ஆணையத்திற்கு தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதன் பேரில் இவ்வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு இனங்கள் 5,10,11,12,13,14,20,21 ஆகியவற்றிற்கு மட்டுமே பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான பதில்/தகவல் வழங்கப்பட்டுள்ளது என்றும் மற்ற இனங்களுக்கு தகவல்கள் வழங்கப்படவில்லையென்றும் மேல்முறையீட்டு அலுவலர் தனது மேல்முறையீட்டு மனுவிற்கு கட்டணம் செலுத்தவில்லையென்று திருப்பி அனுப்பியுள்ளார் என்றும் இது தகவல் பெறும் உரிமைச் சட்டத்திற்கு முரணானது என்றும் தெரிவித்து தனக்கு உரிய தகவல்களை பெற்றுத் தறுமாறு தெரிவித்தார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டு அலுவலரால் 02.05.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஒரு பதில் கடிதம் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் அதில் இனம் வாரியாக தகவல்களும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்பித்தார். மேலும் மறுக்கப்பட்ட விவரங்கள் தங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லையென்றும் இது தாணிப்பாறை சூழல் மேம்பாட்டுக் குழுவால் பராமரிக்கக்கூடும் என்றும் தெரிவித்தார்.

5. ஆணையத்தின் முன் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களை பரிசிலிக்கையில் மனுதாரர் தான் 31 இனங்களில் தகவல்கள் கோரியதாகவும் ஆனால் 8 (5,10,11,12,13,14,20,21) இனங்களுக்கு மட்டுமே தகவல்கள் வழங்கப்பட்டது என்று மேல்முறையீட்டு அலுவலருக்கு முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். ஆனால் மேல்முறையீட்டு அலுவலர் அம்மனுவினை கட்டணம்

செலுத்தப்படவில்லையென்று திருப்பி அனுப்பியுள்ளார், இது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று ஆணையம் கருதுகிறது. இருப்பினும் 02.05.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஒரு பதில் கடிதம் மனுதாரருக்கு மேல்முறையீட்டு அலுவலரால் அனுப்பப்பட்டுள்ளது. அதில் தகவல்கள்/விவரங்கள் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது. மேற்குறிப்பிட்ட ஆவணங்களை பரிசீலிக்கையில் இனங்கள் 1 முதல் 4, 6 முதல் 9, 15 முதல் 19 வரை உள்ள இனங்களுக்கு முழுமையான தகவல்கள் பொது அதிகார அமைப்பால் வழங்கப்படவில்லையென்று ஆணையம் கருதுகிறது. மேலும் இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மறுக்கப்பட்ட விவரங்கள் தங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லையென்றும் இது தாணிப்பாறை சூழல் மேம்பாட்டுக் குழுவால் பராமரிக்கக்கூடும் என்று தெரிவித்தால் **இது குறித்த தகவல்களை மேற்குறிப்பிட்ட குழுவிடம் பெற்று (இனங்கள் 1 முதல் 4, 6 முதல் 9, 15 முதல் 19) மனுதாரருக்கு இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் பதிவஞ்சல் மூலம் அனுப்பி அதனை அவர் பெற்றுக் கொண்டார் என்ற விவரத்தை 25 தினங்களுக்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க பொதுத் தகவல் அலுவலர், வனஉயிரினக்காப்பாளர் அலுவலகம், சாம்பல் நிற அணில் வன உயிரினச் சரணாலயம், திருவில்லிப்புத்தூர் அவர்களுக்கு உத்தரவிட்டு இவ்வழக்கு முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/- (இரா. தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 401/SCIC/2019**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,
சாம்பல் நிற அணில் வன உயிரினச்
சரணாலயம்,
திருவில்லிபுத்தூர்,
விருதுநகர் மாவட்டம்

**மனுதாரர்**

திரு. R. ராஜ்குமார்.
345, நடுத்தெரு, இராமசாமியாபுரம்,
கூமாபட்டி 626 133 வத்திராயிருப்பு
விருதுநகர் மாவட்டம்.

*JJ/PA 03.10.2019*